**கவனிக்க**.*-2020.06.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II, *பகுதி* III, *பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2181 - 2020 ජුනි මස 19 වැනි සිකුරාදා - 2020.06.19**

*2181 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 590 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 591 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூன் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

587-B 82031-5,403 (2020/ 06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், அநுராதபுரம்

விண்ணப்பம்/நியமனப்பத்திரம் கோரல் மஹோபாத்யாய (துணை வேந்தர்) பதவி

*1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக 26 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்த சட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2020, மே 04 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இல. 2/2020 இன் பிரகாரமும் மஹோபாத்யாய பதவிக்கு விண்ணப்பங்கள் அல்லது பெயர் நியமித்தல்கள் தகைமையுள்ள பின்வரும் தகைமைகளையுடைய பிக்குகளிடமிருந்து கோரப்படுகின்றன.*

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌத்த கற்கை நெறிகளில் அல்லது வேறேதாவது இத்துடன் தொடர்புடைய பாடத்தில் இரு வருடங்களுக்கு குறையாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக்காக பெற்ற பட்டப்பின் பட்டதாரிப் பட்டம்.
2. கற்பித்தல் துறையில் பத்து வருட அனுபவம்;
3. கீழைத்தேய மொழிகளில் சிறந்த புலமையைக் கொண்டிருத்தல்;
4. உப்பசம்பாதவிற்குப் பின்னர் இருபது வருடங்களை பூர்த்தி செய்த சிறந்த ஒழுக்கமுடைய உப்பசம்பாத, பிக்கு.

மஹோபாத்யாய மூன்று (03) வருட காலத்திற்கு நியமிக்கப்படுவார். அவர் பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராவார் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலராவர் மற்றும் பிரதான கல்விசார் அலுவலராவார். மஹோபாத்யாய ஒரு உத்தாரிதர சபாவின் பதவி வழி அங்கத்தவரும் பேரவையினதும் மூதவையினதும் தலைவரும் ஆவார். பல்கலைக்கழக வளாகத்தில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கான பொறுப்பையும் கொண்டிருப்பார். மஹோபாத்யாய பல்கலைக்கழகத்தின் கணக்கிடல் அலுவலரும் பேரவையின் எந்தவொரு தீர்மானம் மற்றும் பணிப்புரை ஆகியவற்றிற்கு அமைந்தொழுகும் அலுவலருமாவார். மஹோபாத்யாயவின் கடமையானது ஒரு செயற்பாட்டை அமுல் நடாத்துவதும் அல்லது அந்த செயற்பாட்டை பேரவையின் அல்லது மூதவையின் தீர்மானத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்வதாகும். மஹோபாத்யாயானவர் மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது அறுபத்தைந்து வயதைப் பூர்த்தியடையும் திகதி ஆகிய இரண்டில் எது முன்னால் நிகழுமோ அத்திகதிவரை மஹோபாத்யாய பதவியினை வகித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள்/ பெயர் குறிப்பிடப்படுபவர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பத்தை மூடும் திகதியன்று 63 வயதிற்கு குறைந்தவராகவிருத்தல் வேண்டும்.

மஹோபாத்யாயானவர் பல்கலைக்கழகத்தின் உச்சமட்ட சம்பள மட்டத்தில் நியமனம் பெறவும் அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஏனைய படிகளுக்கும் உரித்துடையவராவார். அவருக்கு உத்தியோகபூர்வ வாகனமும் எரிபொருள் படியும் பல்கலைக்கழக இடப்பரப்பிலேயே இருப்பிட வசதிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பத்துடன்/நியமனங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

(i) பிறந்த திகதி அடங்கலாக விண்ணப்பதாரி/வேட்பாளரின் பூர்த்தி செய்யப்பட்ட சுயதரவு ;

(ii) மஹோபாத்யாயவானவர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான நோக்கம் மற்றும் விண்ணப்பதாரி/வேட்பாளர் எதனை அடைவதற்கு எதிர்பார்க்கின்றார் தொடர்பாக சுருக்கமான கட்டுரையொன்று ;

(iii) பெயர் குறிப்பிடப்படுகின்றவரென்றால் அவரிட மிருந்து இணக்கக் கடிதமொன்று ;

(iv) தொழில் வழங்குபவரிடமிருந்து விண்ணப்பதாரி/அபேட்சகர் நியமனம் பெற்றால் அவர் இலங்கை பிக்கு பல்கலைக் கழகம் நீங்கலாக அரசாங்க துறை, கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவர் என்றால் விண்ணப்பதாரி நியமனத்திற்குப் பின்னர் விடுவிக்கப்படுவார் என்பதாக கடிதம்.

(v) தற்போது பதவி வகிப்பவர் விண்ணப்பதாரி எனின், அவ்வாறான விண்ணப்பதாரியானவர் அவரது பதவி வகித்த காலத்தில் பூர்த்தி செய்யப்பட்ட சாதனைகளின் அறிக்கையொன்று.

பிக்கு விண்ணப்பதாரிகள்/பெயர் குறிப்பிடப்பட்டவர்களில் மேலேயுள்ள திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தகைமைகளை யுடைய மூன்று பெயர்களை தெரிவு செய்து உத்தரித்தார சபாவிற்கு சமர்ப்பித்த பின்னர், உத்தரித்தார சபாவானது ஒரு பிக்கு விண்ணப்பதாரியை தெரிவு செய்து அந்தப் பெயரை அதிமேதகு சனாதிபதிக்கு கௌரவ அமைச்சரின் ஊடாக பரிந்துரை செய்யும்.

மஹோபாத்யாய பதவிக்கு மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆகக்குறைந்தது பத்து (10) நிமிட காலப்பகுதிக்கு ஆனால் (15) நிமிடங்களிற்கு மேற்படாமல் சுருக்கமான சமர்ப்பித்தலொன்றை முன்வைக்குமாறு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்கள்/பெயர் குறிப்பிடப்பட்டவைகள் "பதிவாளர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், புத்தளம் வீதி அநுராதபுரம்" என்ற முகவரிக்கு 2020, யூன் 30 ஆந் தியதின்று பி. ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தை/பெயர் குறிப்பிடப்பட்டவைகள் மற்றும் உரித்தான ஆவணங்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையின் "Post of Mahopadyaya" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மூடும் நேரத்திற்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

2020.03.01 ஆந் திகதியன்று இது தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட முன்னைய விளம்பரமானது இத்தால் இல்லா தொழிக்கப்படுகின்றது.

யூ. டீ. தொடன்வல,
பதிவாளர் மற்றும் பேரவைக்கான செயலாளர்,
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்,
அநுராதபுரம்.

2020, மே 28.

06-269

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

*இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சை - 2020*

***திறமைச் சான்றிதழ்களுக்கான வகைகள்*** :

(அ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(ஆ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் பொது வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(இ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் திறமைகாண் சான்றிதழ்.

2. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்**.- இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் ஒவ்வொருவரும் பதினான்கு (14) வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. ***பரீட்சைத் திட்டம்*** :

(அ) ***உயர்தர வகுப்பு***.- பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது :-

*பகுதி 1* : இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - உயர் மின்னியல் தொழில் நுட்ப வானொலித் தொலைத் தொடர்புகள் - (3 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அவதான நடவடிக்கை முறைகள் - (2 மணித்தியாலங்கள்)

*பகுதி 2* : செயல் முறை மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 05 சொற்கள்)

(ஆ) ***பொது வகுப்பு***.-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத் தொடர்புகள் (2 மணித் தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள் அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

(இ) ***புதுப் பயிலுநர்***.-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள் - (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள் அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

4. **பரீட்சைகளுக்கான நிபந்தனைகள்**.- எல்லாத் திறமைச் சான்றிதழ்களின் பகுதிகளுக்கும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(i) பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் எல்லாப் பகுதிகளிலும் சித்தியடைதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பகுதி 1 இல் (இரண்டு எழுத்துமூல வினாத்தாள்கள்) ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) இப்பரீட்சையின் பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி 2 இற்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்;

5. **பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்**.- இப்பரீட்சை ஆங்கில மொழிமூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

* அத்துடன் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் குறைந்த பட்சம் 50% பெறப்படவேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் தங்களின் பரீட்சைக் கட்டணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் தேவைப்படின் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

* பற்று/ கடன் (மாஸ்டர் & விசா அட்டை)

பரீட்சைக் கட்டணமானது இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பேரில் காசாகவோ அல்லது எந்தவொரு வங்கியினதும் காசோலையாகவோ செலுத்தப்படலாம்.

விண்ணப்பப்படிவமானது, பதியப்பட்ட ஒப்படைப்பு மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது நேரடியாகக் கொண்டுவந்து கொடுக்கப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும். ஏனெனில் தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டதற்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி விண்ணப்பப்படிவமொன்று கவனிக்கப்படவில்லை அல்லது தொலைந்து போயிற்று என்ற உரிமைக் கோரிக்கை எதனையும் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கவனத்திற்கொள்ளாது. கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் அவை ஒரு பரீட்சையிலிருந்து பிந்திய திகதியொன்றில் இன்னொரு பரீட்சைக்கும் மாற்றப்பட முடியாது. தமது விண்ணப்பத்தை மீளப்பெறுகின்ற அல்லது ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக்குத் தோற்ற முடியாத பரீட்சார்த்தி எவரும் ஏதேனும் பிந்திய நுழைவுக்காக முழுப் பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

| பரீட்சையின் வகை | பகுதி 1 இற்கான கட்டணம் ரூபா | பகுதி 2 இற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர்தர வகுப்பு | 250.00 | 128.00 |
| பொது வகுப்பு | 125.00 | - |
| புதுப்பயிலுநர் வகுப்பு | 125.00 | - |

**குறிப்பு**.- அனைத்து அரசாங்க வரிகளும் மற்றும் கட்டணங்கள் உட்பட.

7. **விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி**.- பரீட்சை வருடத்தில் ஒரு முறை நடாத்தப்படும். பரீட்சைத் திகதி, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் தோதான நுழைவுப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அப்படிவங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு அம்முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும் :-

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08.

| சான்றிதழ்களின் வகை | இறுதி நுழைவுத் திகதி |
|---|---|
| உயர்தர வகுப்பு | 2020.07.31 |
| பொது வகுப்பு | |
| புதுப்பயிலுநர் வகுப்பு | |

* குறிப்பு : The link of the Application.

8. **அத்தாட்சிப்படுத்தல்**.- பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் :-

சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை ஆகியவற்றின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர், அரசாங்க சேவையில் ஆண்டொன்றுக்கு ரூபா 4,93,920.00 இற்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்.

இவ்வாறு அமையாத மற்றைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சார்த்திகளை அடையாளம் காணல்**.- பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது ஆளடையாளத்தைக் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

எல்லாப் பரீட்சார்த்திகளும், 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயல்படுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படாத விடயம் எதுவும் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கப்படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
இல. 276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08,
2020, யூன் 08.

http//www.tro.gov.lk/downloads/applications.html.

06-154

## சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

### *ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2020, மாச்சு*

*2014.10.11 ஆந் திகதியும் 1883/17 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக் கோவையின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், இங்கு முன்னர் இத்திணைக்களப் பரீட்சையினை பூர்த்தி செய்யாத நிர்வாக தரத்தையோ விஷேட வைத்திய தரத்தையோ சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருட காலத்தினுள் சித்தியடைய வேண்டியதுமான திணைக்களப் பரீட்சை 2020.07.26 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படும்.*

*02. **தகைமைகள்.**- உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத் திணைக்களப் பரீட்சையினை பூரணப்படுத்தியிராத நிர்வாக தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.*

*03. **விண்ணப்பங்கள்.**- இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2020.06.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்திய பின் விண்ணப்பமானது "சுகாதார அமைச்சு, கொழும்பு – 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடத்தில் பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2020.06.30 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். மேலும் 2020.03.30 ஆந் திகதியுடன் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள அலுவலர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுதியான முத்திரை ஒட்டப்பட்ட 9"X4" அளவுள்ள கடித உறைகள் 02 அனுப்பப்பட வேண்டும். (இதில் விரும்பியவாறு அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).*

***கவனிக்கவும்**: மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 -04 (உ) வரையும் இரண்டாம் பக்கத்தில் 04 (ஊ) – 09 வரையும் அமையுமாறு விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.*

*04. **பரீட்சைக் கட்டணம்.**-*

(i) *முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்களிக்கப் படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு 25 ரூபா வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.*

(ii) *எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.*

*05. **பரீட்சைக்கு உட்படுத்தல்.**-*

(i) *ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.*

(ii) *விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:*

*(அ) தேசிய ஆள் அடையாள அட்டை;*

*(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை;*

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்;

(ஈ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப் பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.)
(சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி www.health.gov.lk)

06. **பரீட்சைத் திட்டம்.**- இப்பரீட்சை, மூன்று, எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்கள/தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம் .**-

7.1 ***எழுத்துப் பரீட்சை*** :

7.1.1 தாபனவிதிக்கோவை வினாத்தாள் :
நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம் :

I. சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.
II. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.
III. தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு:- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII ஆகிய அத்தியாயங்கள்.
II ஆம் பிரிவு:- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் வினாத்தாள் :-
நேரம் 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம் :
சுகாதாரக் கைநூல்

I. வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்
II. ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்
III. மருந்து முகாமைத்துவம்

7.1.3. கணக்கியல் :-
நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம் :

I. சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்
II. சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி

III. சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

I ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 1, 2, 78

II ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119

III ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189

V ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260

VI ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394

VII ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 488, 493

XIII ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 715, 716, 756, 757, 758

பெறுகை வழிகாட்டிக் கோவை

1 ஆம் அத்தியாயம் - அனைத்து பிரிவுகளும்

2 ஆம் அத்தியாயம்- 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8

3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 ***சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை.***- சிங்களம்/ தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்குத் தமிழ் மொழியிலும், தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைபிடித்தல்.**- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது, ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தியின்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

வைத்தியர் எஸ். எச். முணசிங்ஹ,
செயலாளர்,
சுகாதாரம் மற்றும் சுதேச
வைத்திய சேவைகள் அமைச்சு.

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு,
'சுவசிரிபாய',
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2020.06.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2020, மாச்சு**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (தமிழில்) :----.

(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) பதவி (உரிய கூண்டினுள் (✓) அடையாளமிடவும் :

(i) வைத்திய உத்தியோகத்தர் ☐ (ii) பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் ☐

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :----.

(iii) ஆரம்ப தரம்/தரம் II இற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும், தோற்றாவிடின் (✕) குறியை இடவும் :

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் ☐ தாபனவிதிக்கோவை ☐ கணக்கியல் ☐

சிங்களம் வாய்மொழி ☐ தமிழ் வாய்மொழி ☐

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (உரிய கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும்) :

சிங்களம் ☐ ஆங்கிலம் ☐ தமிழ் ☐

04. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :----.
(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது: மத்திய அரசின்கீழ் ☐
மாகாண அரசின் கீழ் ☐

(ஆ) (i) மாகாண சபையாயின் உரிய மாகாணம் :----.

(ii) அதற்குரிய மாவட்டம் :----.

(இ) கையடக்கத் தொலைபேசி இல.:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களில் விரும்பிய பரீட்சை நிலையம். (தெரிவு செய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு **அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்)** பொருத்தமான கூண்டினுள் சரி (✓) அடையாளமிடுக :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9"X4" அளவுள்ள ரூபா 45.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் 02 விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) I. அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

II. அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? :----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :----.

| |
|---|
| முத்திரைக் கூண்டு (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக) |

06. **விண்ணப்பதாரரின் சான்றுரை** :

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்,

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக என்றபடியால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா ..................... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

07. சுயவிபரக் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றுரை.-

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் கையளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத் திணைக்களப்

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.

08. நிறுவனத் தலைவரின் சான்றுரை :

திரு./திருமதி/செல்வி ………………………….. என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறை/ அல்லாத படியால் ரூபா ………………….. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்ட வேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவருக்கு தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :----.

09. விஷேட இயக்க தலைவரின் சான்றுரை :

திரு./ திருமதி/ செல்வி ………………..…….. என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/விஷேட இயக்கத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படுதல் வேண்டும்)

திகதி :----.
(தேவையற்றனவற்றை கீறிவிடவும்)

06 -214

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு

## இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர்களை அதிஉயர் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் அதி உயர் தரத்துக்கு பதவியுயர்த்தும் வகையில் 2017.07.01 ஆந் திகதியன்று நிலவிய வெற்றிடங்கள் 16 இற்காக, இலக்கம் 924/ 2 மற்றும் 1996 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிரலமைச்சுக்கள்/ மாகாண சபைகள்/ உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவையாற்றும் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*01.* **தகைமைகள்** :

*1.1 ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் வகுதி :*

*(அ) வைத்தியசாலை நிர்வாகம் குறித்த மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் ; மற்றும்*

*(ஆ) ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் வகுதியின் இரண்டாம் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல், மற்றும்*

*(இ) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் II ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டப் பின் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் இருந்து பட்டப்பின் பட்ட டிப்ளோமா பாடநெறியை முழுமைப்படுத்தி சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது அதனை விடக்கூடிய உயர் கல்வித் தகைமையைப் பெற்றிருத்தல்.*

*1.2 ஆயுர்வேத ஆய்வு நிறுவனத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (ஆராய்ச்சி) வகுதி :*

*(அ) ஆயுர்வேத ஆய்வு நிறுவனத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (ஆராய்ச்சி) வகுதியின் முதலாம் தரத்தையுடைய உத்தியோகத்தராக இருத்தல், மற்றும்*

*(ஆ) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் III ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டப் பின் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் இருந்து பட்டப்பின் பட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

*இல்லையெனில்*

*(இ) ஆயுர்வேத ஆய்வு நிறுவனத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (ஆராய்ச்சி) வகுதியின் இரண்டாம் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல், மற்றும்*

*(ஈ) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் பிரமாணக் குறிப்பின் III ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டப் பின் பட்டத்தை வழங்கும் நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட பட்டப்பின் பட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

*இல்லையெனில்*

*(உ) அரச அல்லது உள்ளூராட்சி நிறுவனச் சேவை வைத்தியராக பதினைந்து (15) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் : அல்லது அரச மற்றும் உள்ளூராட்சி நிறுவனச் சேவைகளில் வைத்தியராக பதினைந்து (15) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல், மற்றும்*

*(ஊ) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் III ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட பட்டப்பின் பட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல், மற்றும்*

*(எ) ஆயுர்வேத ஆராய்ச்சி தொடர்பான விசேட அனுபவம் கொண்ட வைத்திய உத்தியோகத்தராக இருத்தல்.*

*1.3 சுதேச மருத்துவ முறை தொடர்பான தேசிய நிறுவனத்தின் வைத்திய உத்தியோகத்தர் (கல்வி) வகுதி :*

*(அ) சுதேச மருத்துவ முறைமை தொடர்பான தேசிய நிறுவனத்தின் வைத்திய உத்தியோகத்தர் (கல்வி) வகுதியின் முதலாம் தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல், மற்றும்*

*(ஆ) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் III ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட பட்டப்பின் பட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

*இல்லையெனில்*

(இ) சுதேச மருத்துவ முறைமை தொடர்பான தேசிய நிறுவனத்தின் வைத்திய உத்தியோகத்தர் (கல்வி) வகுதியின் இரண்டாம் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல்.

இல்லையெனில்

(ஈ) அரச அல்லது உள்ளூராட்சி நிறுவனச் சேவை வைத்தியராக பதினைந்து (15) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல் : அல்லது அரச மற்றும் உள்ளூராட்சி நிறுவனச் சேவைகளில் வைத்தியராக பதினைந்து (15) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல், மற்றும்

(உ) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் பிரமாணக் குறிப்பின் III ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் இருந்து பட்டப்பின் பட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல், மற்றும்

(ஊ) கற்பித்தல் நடவடிக்கை தொடர்பாக போதுமானளவு அனுபவம் கொண்ட வைத்திய உத்தியோகத்தராக இருத்தல்.

02. 2.1 இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர் வகுதி மூன்றாம் (03) அதிஉயர் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவது.

வருடாந்த மதிப்பீடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாத்திரமாகும்.

2.2 அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது பதவியுயர்த்தப்படுவது ஒவ்வொரு வருடத்தினதும் சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு அல்லது யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் வலுவிலிருக்கும் வகையிலாகும்.

**குறிப்பு**.- தேர்ந்தெடுக்கப்படும் போது மூப்பு நிலை, அனுபவம் மற்றும் வினைத்திறன் தொடர்பாக விசேடமாக கவனம் செலுத்தப்படும்.

03. பதினாறு (16) பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

(i) 2014.07.01 ஆந் திகதி முதல் 2017.07.01 ஆந் திகதி வரை சகல ஆறு மாதங்களிலும் ஏற்படும் அதிஉயர் தரத்துடைய வெற்றிடங்களுக்காக (உதா : 2014.07.01 ஆந் திகதிக்கு, 2015.01.01 ஆந் திகதிக்கு, 2015.07.01 ஆந் திகதிக்கு என்றவாறு) பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்படுவதனால் அத்திகதிகளில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆயுர்வேத மருத்தவ உத்தியோகத்தர்கள் இதற்காக விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

(ii) ஓய்வு பெறும் சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

04. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்துக்கு ஏற்ப (விண்ணப்பங்களை www.ayurveda.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.) தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2020.07.10 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் "ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மஹரகம" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும், விண்ணப்பங்களை இட்டு அனுப்பி வைக்கும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர்களை அதிஉயர் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. அதி உயர் தரத்தின் பதவிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிமுறை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL-1-2006 இற்கு உரித்தான (ரூபா 22,935-10 ×645 - 8 × 790 - 17 × 1050 - ரூபா 53,555) என்ற சம்பள அளவுத்திட்டத்தில் 20 ஆம் சம்பளப் படிமுறையாக காணப்படுவதுடன் 2016.01.01 ஆந் திகதியின் பின்னர் அதிஉயர் தரத்துக்கு உட்படும் உத்தியோகத்தர்களுக்காக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கமைய SL - 1-2016 இற்கு உரிய (ரூபா 47,615 - 10× 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895) சம்பள அளவுத்திட்டத்தின் 20 ஆம் சம்பள அளவுத்திட்டமாகும்.

06. இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் அதியுயர் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் வழங்கும் நடைமுறை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

6.1. சேவைக்காலம் : (அதிகபட்ச புள்ளிகள் 50)
மேற்படி இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச சேவை காலம் தாண்டி II ஆம் தரத்தில் சேவையாற்றியுள்ள ஒரு (01) வருடத்துக்கு மூன்று (03) புள்ளிகள் வீதம் மற்றும் I ஆம் தரத்தில் சேவையாற்றியுள்ள வருடமொன்றிற்கு ஐந்து (05) புள்ளிகள் வீதமும் வழங்கப்படும். (மூப்பு நிலைக்கான புள்ளிகள் வழங்கும் போது, ஒரு வருடத்துக்கு குறைந்த காலத்திற்கு விகிதாசார முறைப்படி அ. சே. ஆ. கு. சுற்றறிக்கை இலக்க 01/2019 ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக மேற்கொள்ளப்படுகின்றது.)

6.2 மேலதிக கல்வித் தகைமைகள் : (அதிகபட்ச புள்ளிகள் 15)

ஆயுர்வேத சேவைப் பிரமாணத்தில் உள்ளடக்கியுள்ள ஏதேனுமொரு விடயம் தொடர்பாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு/ வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றின் அல்லது உள்நாட்டு/ வெளிநாட்டு பட்டப்பின் பட்டக் கல்வி வழங்கும் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட பட்டப் பின் பட்டத் தகைமைக்காக,

(அ) சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் பட்ட டிப்ளோமாவொன்று - புள்ளிகள் 05

(ஆ) ஆயுர்வேத மருவத்துடன் தொடர்புடைய விஞ்ஞான முதுமானி (M. Sc.) - புள்ளிகள் 08

(இ) ஆயுர்வேத மருவத்துடன் தொடர்புடைய தத்துவ முதுமானி (M. Phill) / வைத்தியக் கலாநிதி (MD) (கல்விச் சபையின் சான்றிதழைப் பெற்றிராத - புள்ளிகள் 10

(ஈ) ஆயுர்வேத மருவத்துடன் தொடர்புடைய தத்துவக் கலாநிதி (Ph. D) / வைத்தியக் கலாநிதி (MD) (கல்விச் சபையின் சான்றிதழைப் பெற்றுள்ள) - புள்ளிகள் 15

**குறிப்பு** : (i) ஆயுர்வேத சேவைப் பிரமாணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள II அல்லது III ஆம் பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தொடர்பாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு/ வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது உள்நாட்டு/ வெளிநாட்டு பட்டப் பின் பட்டம் வழங்கும் கல்வி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மேற்படி பட்டப்பின் தகைமைக்காகவும் புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) மேற்படி இலக்கம் 01 இன் தகைமைகளின் அடிப்படையில் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகளுக்காக இங்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

6.3 வெளியீடுகள் : (அதிகபட்ச புள்ளிகள் 10)
ஆயுர்வேத மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, ஆயுர்வேத மருத்துவத் துறையின் நலனுக்கு உரித்தானதாக பிரசுரிக்கப்பட்டுள்ள சர்வதேச/தேசிய மட்டத்திலான சஞ்சிகைகள்/புத்தகங்கள்/வெளியீடுகள் என்பவற்றுக்காக

(அ) சர்வதேச மட்டத்திலான சஞ்சிகைகளை துறையுடன் தொடர்புடைய கல்விசார் ஆய்வுகள்/வெளியீடுகளுக்காக (ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 10 புள்ளிகள்) அல்லது

(ஆ) துறையுடன் தொடர்புடைய வெளியீடுகள் கல்விசார் புத்தகங்களுக்காக (ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 10 புள்ளிகள்) அல்லது

(இ) தேசிய மட்டத்திலான சஞ்சிகைகள் வெளியீடுகள்/ பத்திரிகையொன்றில் துறையுடன் தொடர்புடைய 500 சொற்களுக்குக் குறையாத ஆய்வுக் கட்டுரைகளுக்காக (ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் அதிகபட்சம் 10 புள்ளிகள்)

**குறிப்பு** : (i) பல நூலாசிரியர்களின் பங்கேற்பினால் வெளியிடப்பட்ட வெளியீடுகள் தொடர்பில் விண்ணப்பதாரிகளின் பங்களிப்பின் அளவு தொடர்பிலும் தெளிவுபடுத்தல்களை முன்வைத்தல் வேண்டும் என்பதோடு, அப்பங்களிப்பின் அளவுக்கு விகிதாசார அடிப்படையில் விண்ணப்பதாரிக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) ஒத்த தரவுகள்/ ஆராய்ச்சித் தகவல்களின் அடிப்படையில் வெளியிடப்படும், அநேகமாக சமனான முடிவுகளை எட்டியுள்ள வெளியீடுகள் வெவ்வேறாக கருத்திற் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் புள்ளிகளை வழங்குவதற்காக ஒரு வெளியீடு மாத்திரம் கருத்திற் கொள்ளப்படும்.

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளியீடு குறித்த துறையுடன் இணங்கியது/ உசிதமானது என, சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவை அமைச்சின் நிபுணத்துவக் குழுவிடம் சமர்ப்பித்து, அதன் மூலம் பெறப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் வெளியீடுகளுக்கான புள்ளிகள் வழங்கப்படும்.

6.4 பயிற்சி (அதிகபட்ச புள்ளிகள் 15)

(அ) இரண்டு (02) வாரங்களுக்குக் குறையாத சுதேச/ வெளிநாட்டு ஆயுர்வேதத் துறையுடன் தொடர்புடைய வைத்தியசாலை முகாமைத்துவம் குறித்த பயிற்சிப் பாடநெறி (ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் அதிகபட்சம் 15 புள்ளிகள்) அல்லது

(ஆ) நியமன அதிகாரியினால் முறைசார்ந்த வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ள ஆயுர்வேத சேவை முகாமைத்துவம் தொடர்பான பதவியொன்றில் பதிற் கடமையாற்றி சேவை அனுபவம், (ஒரு வருடத்துக்கு 03 புள்ளிகள் வீதம் 15 புள்ளிகள்)

6.5 ஏனைய தகைமைகள் : (அதிகபட்ச புள்ளிகள் 10)

(அ) இரண்டாம் மொழி தொடர்பான பாடநெறியொன்றுக்கு (அதிகபட்சம் 2.5 புள்ளிகள்)

(ஆ) இணைந்த மொழி/சர்வதேச மொழிகள் தொடர்பான பாடநெறியொன்றுக்கு (அதிகபட்சம் 2.5 புள்ளிகள்)

(இ) முகாமைத்துவம் தொடர்பான பாடநெறியொன்றுக்கு (அதிகபட்சம் 2.5 புள்ளிகள்)

(ஈ) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பாடநெறியொன்றுக்கு (அதிகபட்சம் 2.5 புள்ளிகள்)

**குறிப்பு** :(i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறையுடன் தொடர்புடையதாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள, 450 மணித்தியாலங்களுக்குக் குறையாத முழு நேர/டிப்ளோமா பாடநெறிக்கு - 2.5 புள்ளிகள்
150 மணித்தியாலங்களுக்குக் குறையாத முழு நேர/பகுதி நேர டிப்ளோமா பாடநெறிக்கு - 1.5 புள்ளிகள்

மூன்று 03 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பத்திர பாடநெறிக்கு - 05 புள்ளிகள்

(ii) மேற்படி ஒவ்வொரு துறைக்கும் உரித்தாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அதியுயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படுவதோடு, வேறு தகைமைகளின் கீழ் பெற்றுக்கொள்ள முடியுமான அதிகபட்ச புள்ளிகள் 10 ஆகும்.

7. தேர்ந்தெடுக்கப்படும் முறை : நேர்முகப் பரீட்சைச் சபையினால் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் கல்வி, தொழில், மூப்புநிலை, சேவை அனுபவம் மற்றும் பயிற்சி தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் மேற்குறிப்பிட்ட புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கு ஏற்ப அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப அதியுயர் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8. இவ் அறிவித்தலின் மூலம் உள்ளடக்கப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். மேலும், இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் ஏதேனும் ஒரு மொழியில் முன்பின்னான முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான விளம்பரமே வலுவானதாகவிருக்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

வைத்தியர் எஸ். எச். முனசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு.

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு,
கொழும்பு 10,
2020, மே 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் அதியுயர் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முழுப் பெயர் :----.
3. பிறந்த திகதி :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
5. தொலைபேசி இலக்கம் :----.
6. தற்சமய சேவை நிலையத்தின் முகவரி :----.

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

7. (i) சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா? :----.
   (ii) சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

8. (i) தற்போதைய பதவி மற்றும் தரம் :----.
   (ii) குறித்த தரத்துக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
   (iii) குறித்த தரத்தில் சேவைக்காலம் :-
   (வருடம் ) .......................... (மாதம்) .......................... (திகதி) ..........................

9. துறையுடன் தொடர்புடையதாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் :

| நிறுவனம் | பாடநெறியின் பெயர் | பாடவிதானம் (இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் II/III ஆம் பின்னிணைப்பின் படி) | காலம் | முழுமைப்படுத்திய திகதி (பயிற்சிக் காலம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

10. பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய கல்வித் தகைமைகள் :

| நிறுவனம் | பாடநெறியின் பெயர் | காலம் | முழுமைப்படுத்திய திகதி (பயிற்சிக் காலம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | | | |
| | | | |

11. பதவிக்கு உரித்தான பாடத்துறை குறித்து உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டுள்ள வெளியீடுகள் :
    i. ....................................
    ii. ..................................

12. மொழித்தேர்ச்சி :
    i. இரண்டாம் மொழித் தேர்ச்சி (சிங்களம்/தமிழ்)
    வருடம் : ....................
    ii. இணைந்த மொழி
    வருடம் :.........................

13. சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றிருப்பின் அவை பற்றிய விபரங்கள் :

| சம்பளமற்ற விடுமுறைகள் பெறுவதற்கான காரணம் | விடுமுறையின் கால எல்லை ........... ஆந் திகதி முதல் ................ வரை | பெற்ற விடுமுறைகளின் அளவு வருடம் மாதம் திகதி |
|---|---|---|
| | | |

14. உமது சேவைக் காலத்தினுள் ஏதேனும் அல்லது சந்தர்ப்பத்தில் தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? (அவ்வாறாயின்) :

| ஒழுக்காற்றுத் தீர்மானம் | குற்றச்சாட்டுப் பத்திரத்தின் படி குற்றம் இழைக்கப்பட்ட கால எல்லை |
|---|---|
| | |

என்னால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதியளிக்கின்றேன். விண்ணப்பங்கள் கோரப்படும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் இதனால் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. நிறுவனத் தலைவரின் பரிந்துரை

........................................ திரு./ திருமதி/ செல்வியினால் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் அதியுயர் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை இத்துடன் முன்வைப்பதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனவும், உடன்முன்னரான 05 வருடங்களினுள் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டுள்ளது/இல்லை எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்,
மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு முரணான விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற தகவல்களை வழங்கியுள்ள விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

6-258

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.